பக்கங்கள்: 12

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 16 புதன்கிழமை 02.11.2022 கதிர் 360

இனி இது ரகசியம் அல்ல!

இது அபத்த நாடு. தோற்றுப் போன நாடு. வங்குரோத்தான தேசம். கடனிறுக்க வக்கற்ற நாடு. இவையெல்லாம் இன்றைய இலங்கையின் அவல நிலையை எடுத்துக்காட்டும் பட்டங்கள். இவ்வாறு வீழ்வது அப்படி ஒன்றும் தப்பல்ல. ஆனால் ☞2

# இணைந்து செயற்படுதல் என்பது எப்போதும் தேர்தலை இலக்கு வைத்த செயற்பாடு அல்ல

## கட்சிக்குள்ளும் வெளியிலிருந்தும் வந்த விமர்சனங்களுக்கு மனோ தக்க பதிலடி



இணைந்து செயற்படுதல் என்பது எப்போதும் தேர்தலை இலக்கு வைத்த செயற்பாடு அல்ல என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இனத்தின், சமூகத்தின், நாட்டின் பொதுப் பிரச்சினைகள், சவால்கள், இலக்குகள் தொடர்பில் மாறுபட்ட கட்சி ☞2

# கொழும்பில் அரசுக்கு எதிராக இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்



## ஐக்கிய மக்கள் சக்தியும் முழு ஒத்துழைப்பு கூட்டுப் பிரகடனத்தில் சஜித் கையெழுத்து

**கொழும்பில் இன்று அரசுக்கு எதிராக முன்னெடுக்கப்படவுள்ள பேரணியில் ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்காது எனச் சிலர் கூறுகின்றனர். இது முழுக்க முழுக்க பொய். இந்தப் பேரணிக்கு ஐக்கிய மக்கள் சக்தி முழுமையாக ஆதரவளிக்கும் என்பதோடு,ஐக்கிய மக்கள் சக்தியானது நூறு வீதம் தமது ஒத்துழைப்பையும் வழங்கும்.**

**- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.** ☞2

## வலிகாமம் வடக்கு காணி சுவீகரிப்புக்கு எதிராக

# வடக்கு - கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் தெல்லிப்பழைச் சந்தியில் இன்று போராட்டம்

## சிவில் அமைப்புக்கள், அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு

யாழ். வலிகாமம் வடக்கில் பாதுகாப்புத் தரப்பின் ஆக்கிரமிப்பிலுள்ள ஆயிரத்து 600 ஏக்கர் காணிகளை நிரந்தரமாகச் சுவீகரிக்கும் அரசின் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று காலை 10 மணிக்கு தெல்லிப்பழைச் சந்தியில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்துக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ☞2

# மேலும் அரசியல் கைதிகள் பொங்கலுக்குள் விடுவிப்பு!

## விக்கிக்கு நீதி அமைச்சர் தெரிவிப்பு

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள மேலும் பல கைதிகளை விடுவிக்க அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தமக்கு அறிவித்தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

கடந்த 30 ஆம் ☞2

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியில் நேற்றுப் போராட்டம்!



கிளிநொச்சியில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், நடமாடும் சேவை நடைபெற்ற இடத்தின் முன்பாக காணாமல் காணாமலாக்கப்பட்டவர்கள் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் ஒன்றை நேற்று ☞11

# கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு அருகில் சிரமதானப் பணியால் முறுகல்!

## மக்கள் முன்னணியினருக்கு படை அச்சுறுத்தல்



யாழ்ப்பாணம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு முன்பாகவுள்ள வீதியை தமிழ்தேசியமக்கள்முன்னணியினர் நேற்று மாலை சிரமதானம் செய்ய முற்பட்ட போது குழப்பமான சூழல் ஏற்பட்டுள்ளது.

மாவீரர்களை நினைவு கூரும் ☞11

# குடாநாட்டில் பல குடும்பங்கள் தொடரும் மழையினால் பாதிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.02

குடாநாட்டில் 3 நாள்களாக தொடரும் பருவ மழை காரணமாக நூற்றுக் கணக்கான குடும்பங்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றன என மாவட்டச் செயலகம் ☞11

# மருத்துவ மாணவர் இருவர் ஹெரோய்னுக்கு அடிமை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் இருவர் ஹெரோய்ன் பாவனைக்கு அடிமையாகியுள்ளனர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வடக்கு ஆளுநர் அலுவலகத்தில் நீதி ☞2

# கோட்டாவின் தோல்விக்கு நாமலே முழுக் காரணம்

## பேராசிரியர் சன்ன ஜயசுமண சாடல்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் தோல்விக்குக் கட்சியின் சக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவே காரணமென ஸ்ரீலங்கா பொதுஜன ☞11

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விழுந்த பின்னரும் எழ முயற்சிக்காமல் இருப்பது - மீண்டெழ நியாயமாக எத்தனைக்காமல் தவிர்ப்பது - பெருந்தப்பு.

நமது நாடு பேரினவாத ஆக்கிரமிப்புத் திமிரில் - மேலாண்மை செருக்கில் - அட்டூழியம் பண்ணி நின்றமைதான் இந்த நிலைமை ஏற்பட மூல காரணம். பொருளாதாரப் பின்னடைவிலிருந்து எல்லா வற்றினதும் மூலம் அங்குதான் ஆரம்பமாகின்றது. யுத்தத்திற்கு கொட்டிக் கொட்டிக் கொடுத்து நாட்டை குட்டிச்சுவர் ஆக்கியமையே அந்தப் பண்பியல்பால்தான்.

ஆனால் நாடும் அதன் வழிகாட்டிகளும் அந்த முட்டாள்தனமான பேரினவாதப் போக்கிலிருந்து இன்னும் கூட மீளவே இல்லை என்பதுதான் நாட்டின் துரதிஷ்டம். அதனால் இந்தப் பின்னடைவிலிருந்து நாடு மீண்டெழுப் போவதில்லை என்பதும் நிஜம்!

போருக்குக் கொட்டிக் கொடுத்துதான் கெட்டழிந்தோம் என்ற பாடத்தை படித்த பின்னரும் கூட, அந்தப் பேரினவாத பரவணிப் பண்பியல்பிலிருந்து அது சற்றேனும் கீழ் இறங்கவும் இல்லை, மாறவும் இல்லை என்பதையே அடுத்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடுகள் பறைசாற்றி நிற்கின்றன.

உச்ச யுத்த காலத்தில், பாதுகாப்புத் துறைக்கு செலவிட்ட தொகையின் மூன்று மடங்கை இப்போதும் பாதுகாப்பு செலவினத்துக்கு ஒதுக்கி இருக்கின்றது இந்த அரசு. சுகாதாரம், கல்வி ஆகிய பிரதான இரண்டு துறைகளுக்கும் சேர்த்துச் செலவிடும் தொகையிலும் விடக் கூடிய தொகை பாதுகாப்பு துறைக்கு.

அப்படியானால் இந்த நாடு எப்படி உருப்படும்? எவ்வாறு மீண்டெழும்?

பாதுகாப்பு செலவினை ஒதுக்கீட்டை விகிதாசார ரீதியில் ஒப்பிட்டால் உலகில் பாதுகாப்புக்காக இஸ்ரேலுக்கு அடுத்து அதிக தொகையை ஒதுக்கும் நாடு இலங்கைதான்.

இஸ்ரேல் ஏன் அத்துணை தொகைப் பாதுகாப்புக்கு ஒதுக்குகின்றது என்பது நமக்கு எல்லாம் தெரியும். தன்னைச் சுற்றி இருக்கும் இஸ்லாமிய நாடுகளிடமிருந்து தன்னை பாதுகாக்க அல்ல, அந்த நாடுகளை அடக்குவதற்கு.

அதே காரணம்தான் இலங்கையிலும்.

மற்றைய நாடுகள் எல்லாம் எரிபொருள், சக்தி - வலு, உணவு, சுகாதாரம், கல்வி என்று வாழ்வியலுக்கு முக்கியமான துறைகளுக்குப் பெருமளவு ஒதுக்கீட்டை செய்ய, இலங்கை மட்டும் - அது வங்குரோத்தாகி, உரிய பொருளாதார பின்னடைவுப் பாடத்தைப் படித்த பின்னரும் - பாதுகாப்புக்குக் கட்டுமட்டில்லா அளவு உச்ச ஒதுக்கீட்டைச் செய்கின்றது.

இந்த நாடு உருப்படவே போவதில்லை என்பது அதன் இந்தச் செயற்பாட்டில் பொதிந்திருக்கின்றமையை நிச்சயம் அடையாளம் காணலாம்.

- மின்னல் -

## இணைந்து செயற்படுதல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்கள் ஒன்றாக அமர்வது, பேச்சுகளை நடத்துவது முற்போக்கான கலாசாரம். இதுதான் பொது நோக்கில் இணைந்து செயற்படுவது என்பதாகும். இணைந்து செயற்படுதல் என்பது எப்போதும் தேர்தலை இலக்கு வைத்த செயற்பாடு என்பது மட்டும்தான் என்ற சம்பிரதாயத்தில் இருந்து நாம் வெளியே வர வேண்டும்.

பொது விடயங்களில் ஒன்று சேர வேண்டும் என்ற விடயத்தில், சிங்கள அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள், சிங்கள மக்கள், தமிழ் பேசும் அரசியல்வாதிகளைவிட, தமிழ், முஸ்லிம் கட்சிகளைவிட கணிசமாக முற்போக்காக இருக்கின்றார்கள். நாமும் அந்த முற்போக்கான கலாசாரத்தை உள்வாங்க வேண்டும்.

நமது கட்சிகளுக்கு வெளியே பெரும்பான்மை அரசியல்வாதிகளுடனும் பொது விடயங்களில் ஒன்றாக அமர்ந்து உரையாட நாம் தயங்குவதில்லை.

தீபாவளி தினத்தில் காலையில் எதிரணித் தலைவருடனும், மாலையில் நாட்டின் ஜனாதிபதியுடனும் அமர்ந்து நமது மக்களின் விவகாரங்களை உரையாட தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருக்கு முடிகின்றது என்றால் அது கூட்டணிக்கு உரிய அங்கீகாரத்தையே காட்டுகின்றது.

எல்லா கூட்டு அமர்வுகளும் தேர்தல் கூட்டுகள் என்றும், எல்லா சந்திப்புகளும் அமைச்சரவையில் இடம் பிடிக்க வேண்டும் என்றும் எடுத்த எடுப்பிலேயே முடிவு செய்து ஆரம்பிக்கக் கூடாது. அப்படி ஆரம்பித்தால், ஆரம்பித்த வேகத்திலேயே அவை முடிவுக்கு வந்து விடும்.

தேர்தல்கள் குறிப்பிட்ட வேளைகளில் நடைபெறும். தேர்தல் இல்லாத பணியாற்ற வேண்டிய காலங்களே அதிகம். ஆகவே தேர்தல்களுக்கு அப்பால், நாம் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களின் பொது பிரச்சினைகள் தொடர்பில் மாற்றுக் கட்சியினருடன், குறைந்தபட்ச பொது வேலைத்திட்டம் என்ற அடிப்படையில் பல்குழல் எறிகணைகளாகச் செயற்பட வேண்டும்.

தமிழ் முற்போக்கு கூட்டணி இப்போது, ஐக்கிய மக்கள் கூட்டணிக்குள் ஒரு பிரதான பங்காளி கட்சி. ஐக்கிய மக்கள் கூட்டணிக்குள் வேறு தமிழ்க் கட்சிகளை உள்வாங்குவது மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணி, தேர்தல் நோக்குகளில் ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் கூட்டுச் சேருவது, தேர்தல் கூட்டணிகள் அமைப்பது என்பவற்றை தேர்தல் வரும் போது நிச்சயமாக பேசலாம். நமது மக்களின் பிரதிநிதித்துவங்களை அதிகரிக்கலாம்.

இன்று தேர்தல் கூட்டணி பற்றி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுடன் நாம் பேசவில்லை. அதேவேளை தென்னிலங்கை தமிழ்க் கட்சிகள் ஒரு கூட்டணிக்குள் வரவேண்டும் என்று எவரும் எமக்கு அழுத்தம் தரவும் இல்லை.

ஏற்கனவே தமிழ் முற்போக்கு கூட்டணி தயாரித்துள்ள, மலையகத் தமிழர் தேசிய அரசியல் அபிலாசை ஆவணம் இ.தொ.காவிடம் தரப்பட்டுள்ளது. அந்த ஆவணம் மூலம் நமது மக்கள் இந்நாட்டின் முழுமையான குடிமக்களாக ஏற்கப்பட வேண்டும் என்பதை நாம் தர்க்க ரீதியாக கோரியுள்ளோம்.

தேசிய அரசியல் அபிலாஷை ஆவணத்தை ஏற்றுக்கொள்வதாக அதிகாரப்பூர்வமாக எழுத்து மூலம் எமக்கு அறிவிக்கவிக்கும், எல்லாக் கட்சிகளுடனும் சேர்ந்து, அதைப் பொது ஆவணமாகக் கொண்டு, அனைத்து உள்நாட்டு, வெளிநாட்டுத் தரப்பினரிடமும் நாம் கூட்டாக எடுத்துச் சென்று கலந்துரையாடலாம். இதுவே இன்றைய காலத்தில் நாம் செய்ய வேண்டிய மிக முக்கியமான பணி என நான் நம்புகின்றேன் - என்றுள்ளது.

## கொழும்பில் அரசுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடக்குமுறைக்கு எதிராகத் தனித்து நின்று போராடக் கூடாது எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அதற்காக ஒன்றிணைந்து போராட வேண்டும் எனவும் கூறினார்.

ஒதுங்கி, தனிமைப்பட்டு குறுகிய கொள்கைகளின் அடிப்படையில் இந்நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், தற்போது நிலவும் அடக்குமுறைகளை எதிர்கொள்ள அனைவரும் ஒன்றிணைவதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

இன்று இடம்பெறும் பேரணி ஓர் அமைதி வழிப் பேரணி எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அதனை அடக்குவதற்குப் பாதுகாப்புத் தரப்பினர் தயாராக இருந்தால், உடனடியாக அந்தத் தயார்படுத்தல்களை வாபஸ் பெற வேண்டும் எனவும், அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு எவரேனும் இடையூறு விளைவித்தால், அதற்கு எதிராக மேற்கொள்ள முடியுமான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

ஜனநாயக, அமைதிவழிப் பேரணியை எதிர்ப்பதற்கு எவருக்கும் உரிமை இல்லை எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அடக்குமுறையின் பிதாக்கள் ராஜபக்ஷக்களே எனவும் குறிப்பிட்டார்.

சிறிதம்ம தேரர், வசந்த முதலிகே உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டு எவ்வித குற்றச்சாட்டுகளும் இன்றியே சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், ராஜபக்ஷக்களும் 'மொட்டு'வின் ஏனைய மக்கள் பிரதிநிதிகளுமே புனர்வாழ்வளிக்கப்பட வேண்டியவர்கள் எனவும் சுட்டிக்காட்டினார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற அடக்குமுறைக்கு எதிரான தொழிற்சங்கங்களின் கூட்டுப் பிரகடனத்தில் கையொப்பமிடும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

## வடக்கு - கிழக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர் ஒன்றியத்தால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கில் இராணுவத்தினர் வசமிருந்த 6 ஆயிரத்து 384 ஏக்கர் காணியை நிரந்தரமாகச் சுவீகரிக்கும் வர்த்தமானி 2013ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அப்போதைய பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷவால் வெளியிடப்பட்டது. இதனை எதிர்த்து வழக்குத் தாக்கல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் போராட்டங்களும் நடத்தப்பட்டிருந்தன.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் வலிகாமம் வடக்கில் பாதுகாப்புத் தரப்பினர் வசமிருந்த காணிகள் ஓரளவு விடுவிக்கப்பட்டன. இன்னமும் 3 ஆயிரம் ஏக்கர் வரையிலான காணிகள் விடுவிக்கப்படவேண்டியுள்ளன. இவ்வாறு உள்ள காணிகளில் ஆயிரத்து 600 ஏக்கர் காணிகளை சுவீகரிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு காணி அமைச்சால், வலிகாமம் வடக்கு பிரதேச செயலருக்கு செப்டெம்பர் மாதம் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்துக்கு அமைவாக நடவடிக்கைகளை முன்னெடுக்க நில அளவைத் திணைக்களத்துக்குப் பிரதேச செயலர் பாரப்படுத்தியிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே வலிகாமம் வடக்கு காணி சுவீகரிப்பைத் தடுத்து நிறுத்துவதற்கான போராட்டத்துக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

சிவில் அமைப்புக்களையும், அரசியல் கட்சிகளையும் இதில் பங்கெடுக்குமாறும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அத்துடன் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் இந்தப் போராட்டத்தில் இணைந்துகொள்ளவுள்ளனர்.

## மேலும் அரசியல் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதி அமைச்சரை யாழ்ப்பாணத்தில் சந்தித்தார் எனவும், சந்திப்பின் போது, அடுத்த ஆண்டு தைப் பொங்கலுக்குள் மேலும் பல பயங்கரவாதத் தடைச்சட்டக் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக அவர் கூறினார் எனவும் தெரிவித்தார்.

மற்ற அனைவரையும் விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டேன். கைதிகளை விடுவிப்பதில் ஆர்வமாக உள்ளார் எனவும், ஆனால் பல்வேறு சட்ட சிக்கல்கள் இருக்கின்றன எனவும், சட்டமா அதிபர் திணைக்களத்துடன் இது குறித்துப் பேசிவருகின்றார் எனவும் அமைச்சர் இதன் போது தெரிவித்தார் என்றார் விக்னேஸ்வரன்.

## மருத்துவ மாணவர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் விஜயதாச தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலிலையே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்கள் 9 ஆயிரத்து 900 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், உலகின் மிகமிக ஆபத்தான உயிர்கொல்லி கொக்கெய்ன் போதைப்பொருள் பாவனையாளராக ஒருவர் அடையாளப்படுத்தப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@gmail.com



# இன்னும் ஐந்து நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன

# அமெரிக்க லொத்தர் விசா

நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!






அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்

அலட்சியம் வேண்டாம்

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க **நம்பிக்கையுடன்** எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் 240 பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

Love You

**0768226244**

**0768226240**

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே விசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022

EMERGENCY ALERT சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | - 0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | - 0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | - 0777718322 | சங்கானை | - 0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இன்றைய போராட்டம்

ரணில் விக்கிரமசிங்கவின் அரசுக்கும் சரி, பிரதான எதிர்க்கட்சிகளுக்கும் சரி, இன்று முக்கியமான ஒரு நாள் என்றே கூற வேண்டும்.

மீண்டும் மக்கள் போராட்டம் வெடிக்கும், வெடிக்கும் என்று தமிழ்க் கட்சியின் தலைவர் ஒருவர் அடிக்கடி கூறுகின்றமை போல, அண்மைக்காலத்தில் அதே சுலோகம் தென்னிலங்கையின் பல தரப்புகளினாலும் தொடர்ந்து கூறப்பட்டு வந்தது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸாவில் இருந்து, அவரது கட்சியின் ஹிருணிகா பிரேமச்சந்திரா வரை, அத்தரப்பில் அடிக்கடி 'மீண்டும் போராட்டம் வெடிக்கும்!' என்ற சுலோகம் மந்திரமாக ஓதப்பட்டு வந்தது.

கடந்த ஜுலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகும் வரை – அல்லது பதவியை விட்டு வெளிநாட்டுக்கு ஓடித் தப்பும் வரை – முழுமூச்சாக இயங்கிய 'அறகலய' போராட்டம், கோட்டாவின் பதவி துறப்போடு தானாக மெல்ல மெல்ல செயலிழந்து போனது.

அடுத்த ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க அதிகாரத்துக்கு வந்ததும், இந்த அறகலய போராட்டம் மங்கி, வீரியம் குறைந்து, செயலிழந்து போனது என்பது உண்மைதான்.

ஒருபுறம் அந்தப் போராட்டத்திற்கு மீள உருக் கொடுக்க, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தலைகீழாக நின்று பார்த்தது.

அதேசமயம் முன்னைய அறகலயப் போராட்டக் காரர்களைத் தேடித் தேடிக் கண்டுபிடித்துச் சிறையில் அடைக்கும் தனது கைங்கரியத்தையும் ரணிலின் புதிய அரசு மேற்கொண்டது.

மக்கள் எதிர்ப்புப் போராட்டங்களை இரும்புக் கரம் கொண்டு அடக்குவது என்ற தன் போக்கை ரணிலின் அரசு வெளிப்படுத்தி உள்ளது. இதற்காக உள்நாட்டில் மட்டுமல்ல, ஐ.நா. போன்ற சர்வதேச அமைப்புகளினாலும் அது கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது.

அந்த 'மீண்டும் வெடிக்கும் போராட்டத்தை' இன்று கொழும்பில் மீள ஆரம்பித்து வெளிப்படுத்த சஜித்தின் கட்சியும் சேர்ந்து முன்வந்திருக்கின்றது.

ஜனாதிபதி கோட்டாபயவை அதிகாரத்தில் இருந்து கலைத்த அறகலய போராட்டம் போன்ற ஒன்றை – அதுக்குக் கிட்ட நிற்கக் கூடிய – ஒரு மக்கள் எழுச்சியை, மீண்டும் ஏற்படுத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி போன்ற தரப்புகளுக்கு இயலுமா என்பது இன்று ஓரளவு தெரிந்து விடும்.

இன்று நடப்பது அமைதி வழி போராட்டம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸா ஏற்கனவே அறிவித்திருக்கிறார்.

மக்களின் அந்த உரிமையை ஏற்று, சகித்து, ரணிலின் அரசு பார்த்திருக்குமா அல்லது அடக்குமுறையை ஏவி விட்டு தனது கைவரிசையை காட்டுமா என்பது இன்று மாலை தெரிந்து விடும்.

ஒட்டு மொத்தத்தில் இன்றைய தினம் தென்னிலங்கை அரசியல் சக்திகளுக்கு பலப்பரீட்சை நடத்தும் துவந்த யுத்தத்துக்கான நாளாக – களமாக – மாறப்போவது கண் கூடு.

## வெளிநாடுகளின் பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்றவர்களின் வேலைவாய்ப்பை துரிதப்படுத்துக!

### செல்வம் எம்.பி. கோரிக்கை



வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற இளங்கலை பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பிரதமர் தினேஸ் குணவர்த்தனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்–

வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற இளங்கலை பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குமாறு நான் பலமுறை நாடாளுமன்றத்தில் பேசியுள்ளேன். இது கடந்த காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மேற்குறிப்பிட்ட விடயத்தில் எடுக்கப்பட்ட சாதகமான முடிவு அனைவராலும் வரவேற்கத்தக்கது மற்றும் பாராட்டுக்குரியது. இந்த முடிவு இளைஞர்கள் மத்தியில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இத்தருணத்தில் இந்தத் தீர்வை நான் சரியானதாகவே பார்க்கிறேன். இந்த முடிவை உடனடியாக அமுல்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். – என அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வடக்கு மாகாணப் பண்பாட்டுப் பெரு விழாவின் இளம்கலைஞர் தெரிவில் வவுனியா புறக்கணிப்பு!

வடமாகாண பண்பாட்டு பெருவிழாவில் இளம்கலைஞர்களுக்கான ஊக்குவிப்பு விருது வழங்கல் நிகழ்வில் வவுனியா மாவட்டம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக கலைஞர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வடமாகாண பண்பாட்டுப் பெருவிழா கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் சிறப்பாக இடம்பெற்றது. இதன்போது வடக்கு மாகாண இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாக இளம் கலைஞர் ஊக்குவிப்பு பரிசு வழங்கப்பட்டது. அதில் யாழ்ப்பாணத்தின் தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய், நல்லூர், சாவகச்சேரி, யாழ் நகரம் உள்ளடங்களாக 11 பேருக் கும், மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் என 12 பேருக்கு இளஞ்கலைஞர் ஊக்குவிப்பு விருது வழங்கப்பட்டது.

வடக்கின் வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மடாவட்டங்களை பிரதிநித்துவப்படுத்தி இளம் கலைஞர் ஊக்குவிப்பு விருது வழங்கப்படவில்லை. குறிப்பாக வவுனியா மாவட்ட மற்றும் பிரதேச கலாசார உத்தியோதகத்தர்களும் மாவட்ட செயலக அதிகாரிகளும் சரியான முறையில் மாவட்டத்தில் உள்ள இளம் கலைஞர்களது விவரங்களை அனுப்பி வைக்காமையே வவுனியா மாவட்டம் புறக்கணிக்கப்பட்டமைக்குக் கார ணம் என கலைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

மாவட்ட மற்றும் பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள் கலைஞர்களுடன் தொடர்பற்றவர்களாகவும், தமக்கு என குறிப்பிட்ட சிலரை வைத்துக் கொண்டு செயற்படுவதாலும், மாவட்ட மற்றும் மாகாண மட்டத் தககல்களை கலைஞர்களுக்கு உரிய காலத்தில் வழங்காமையாலும் இளம் கலைஞர் விருதில் இருந்து வவுனியா மாவட்டம் விடுபட்டுள்ளதாகக் கலைஞர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வடக்கின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கலாசார பண்பாட்டு விழா பாரம்பரிய கலாசார பண்பாடுகளையும், கலைகளையும் வெளிப்படுத்தும் வகையில் சிறப்பாக வீதி ஊர்வலத்துடன் இடம்பெற்ற போதும், வவுனியா மாவட்ட கலாசார பண்பாட்டு விழா மாவட்ட செயலக வளாகத்துக்குள் முடங்கிய நிலையில் கலைஞர்களுக்கு முறையான அறிவித்தல்கள் வழங்கப்படாத நிலையில் இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மேல்நீதிமன்ற நீதிபதிகள் சங்க தலைவரானார் இளஞ்செழியன்!



மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்கத்தின் (High Court Judges' Association) தலைவராக மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முதன்முறையாக தமிழ்பேசும் மேல் நீதிமன்ற நீதிபதி, மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்கத்துக்கு தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேல் நீதிமன்ற நீதிபதிகள் சங்கத்தின் தலைவர் பதவியில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு சங்கத்தின் ஏகமனதான தீர்மானத்துக்கு அமைய உப தலைவரான மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேல் நீதிமன்ற நீதிபதி லால் ஆர்.பண்டார செயலாளராகவும் மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.எம். எம். சகாப்தீன் உதவிச் செயலாளராகவும் மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி ஜனாதி டீ அல்விஸ், பொருளாராகவும் பதிப்பாசிரியராக மேல் நீதிமன்ற நீதிபதி நவரட்ண மாரசிங்க ஆகியோர் தொடர்ந்து பதவி வகிக்கின்றனர்.



# எந்த அரசியல் கட்சியும் மக்களின் நலனுக்காக செயல்படுவதில்லை!

## தம்மரதன நாயக்க தேரர் வேதனை

நாட்டிலுள்ள எந்தவொரு அரசியல் கட்சியும் பொது மக்களின் நலனுக்காக செயற்படுவதில்லை என மிஹிந்தலை ரஜமஹா விஹாராதிபதி வளவஹங்குணவேவே தம்மரதன நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

ஆகவே பொதுமக்கள் வரவிருக்கும் தேர்தல்களில் எந்தக் கட்சிக்கும் வாக்களிக்கக் கூடாது என தம்மரதன நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் வீழ்ச்சிக்கு அனைத்து தரப்பினரும் காரணம் என்பதால் இலங்கையை ஆட்சி செய்த அரசாங்கங்கள் மீது தமக்கு நம்பிக்கை இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களும் ஒன்றிணைந்து இலங்கையை 'ஏழை நாடு' என்று வர்த்தமானியில் அறிவித்துள்ளதாகத் தேரர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அபிவிருத்தியடைந்து வரும் நாடாக அறியப்பட்ட போதிலும், 75ஆவது சுதந்திர தின விழாவை 'ஏழை நாடாக' நினைவுகூரத் தயாராகி வருவதாக தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகள் மக்களுக்கு சேவை செய்வதில் ஆர்வம் காட்டுவதில்லை எனவே உள்ளூராட்சி, மாகாண சபை அல்லது பொதுத் தேர்தல்கள் எதுவாக இருந்தாலும், மக்கள் கட்சிகளின் பேரணிகளில் கலந்து கொள்ளவோ வாக்களிக்கவோ வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.



மதகுருமார்கள் எந்தவொரு அரசியல்வாதிக்கும் ஆதரவளிக்கக் கூடாது என்றும் மக்கள் தேர்தலில் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்றும் தம்மரதன நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

# 21ஆவது தமிழிணைய மாநாடு டிசம்பரில்!




உலகத் தமிழ் தகவல் தொழில் நுட்ப மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் 21வது தமிழிணைய மாநாடு (Tamil Internet Conference) எதிர்வரும் மார்கழி மாதம் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாடு தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் கடந்த 29ம் திகதி சனிக்கிழமை நடைபெற்றிருந்தது.

இப்பத்திரிகையாளர் சந்திப்பில் தஞ்சை பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் திருவள்ளுவன், உத்தமத்தின் தற்போதய தலைவர் த.தவரூபன், உத்தமத்தின் முன்னாள் தலைவர் முனைவர் மா.கணேசன் , செயல் இயக்குனர் முனைவர் இ.பொன்னுசாமி ஆகியோர் மாநாடு குறித்து ஊடகவியலாளருக்கு விளக்கமளித்தனர்.

மேலும் தமிழிணைய மாநாடு தொடர்பான மேலதிக தகவல்களை தெரிந்து கொள்ள www.tamilinternetconference.org என்கின்ற இணைய முகவரியை பயன்படுத்த முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.



# தென்கொரியாவில் சன நெரிசலில் சிக்கி உயிரிழந்த இலங்கையரின் சடலத்தை கொண்டுவர ஏற்பாடுகள்!

## வெளிவிவகார அமைச்சு நடவடிக்கை

தென்கொரியாவில் சன நெரிசலில் சிக்கி உயிரிழந்த இலங்கையரின் சடலத்தை நாட்டிற்கு கொண்டு வருவதற்கு உதவியளிக்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

உறவினர்களின் கோரிக்கைக்கு அமைய இந்த ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

கண்டியை சேர்ந்த 27 வயதுடைய மொஹமட் ஜின்னாத் என்பவரே இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

தென்கொரியாவில் சியோலின் இடாவோன் மாவட்டத்தில் ஹாலோவீன் சன நெரிசலில் சிக்குண்டு 19 வெளிநாட்டவர்கள் உள்ளிட்ட 153 பேர் இதுவரை உயிரிழந்துள்ளமையோடு, 149 பேர் காயமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நல்லூர் தொகுதி நிர்வாக தெரிவு!

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நல்லூர்த் தொகுதிக் கிளை பொதுச் சபைக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர்த் தொகுதிக் கிளைக் காரியாலயத்தில், அதன் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு விசேட அதிதியாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா கலந்து கொண்டார்.

தொகுதிக் கிளையின் புதிய நிர்வாக சபைக்கான தெரிவு கட்சியின் நிர்வாகச் செயலாளர் ஆ.சே.குலநாயகத்தால் நடத்தப்பட்டு, சீ.வீ.கே.சிவஞானம் தலைவராகவும், பெ.கனகசபாபதி உபதலைவராகவும், இராசதேவன் செயலாளராகவும், பத்மராஜா உபசெயலாளராகவும் தியாகமூர்த்தி பொருளாளராகவும், நிர்வாக சபை உறுப்பினர்களாக வசந்தகுமாரும் இராசசேகரமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் முதலாவது தொகுதிக் கிளைத் தெரிவு இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கலந்துரையாடலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஒன்றுபட்டு செயற்படவேண்டும் எனவும் உள்முரண்பாடுகளைச் சீர்செய்ய வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் தமிழ்த் தேசிய பரப்பில் உள்ள கட்சிகளும், பொது விடயங்களில் இணைந்து செயற்படுதல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. அரசியல் தீர்வு, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைகள், அரசியல் கைதிகள் விடுதலை, காணிகள் அபகரிப்பு போன்ற விடயங்களில் ஜனாதிபதியுடன் பேசவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்தவரை 2014 ஆம் ஆண்டுக்குப் பின்னரான எட்டு வருட காலத்தில் 2019 இல் மாத்திரம் ஒரு மகாநாடு நடத்தப்பட்டது. எனவே கடந்த மத்திய செயற்குழுவில் தெரிவித்தபடி இந்த வருட முடிவுக்குள் கட்சியின் மாகாநாடு நடத்தப்பட வேண்டும் எனவும் ஏனைய தொகுதிக் கிளைத் தெரிவுகள் துரிதமாக நடத்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# கட்சி உறுப்பினர் ஒருவருக்கு எதிராக பொலிஸ் உத்தியோகஸ்தர் முறைப்பாடு!

தன்னை மிரட்டி, தனது கடமைக்கு இடையூறு விளைவித்தார் எனத் தென்னிலங்கை கட்சி உறுப்பினர் ஒருவருக்கு எதிராக தமிழ் பொலிஸ் உத்தியோகஸ்தர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

காணி பிணக்கு ஒன்று தொடர்பில் தமக்கு சாதகமாக செயற்படுமாறு கட்சி உறுப்பினர், தமிழ் பொலிஸ் உத்தியோகத்தரை கோரியுள்ளார்.

அதற்கு அவர் மறுப்பு தெரிவிக்கவே , கட்சி அலுவலகத்திற்கு நேரில் வருமாறும், இல்லாவிடின் தனது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி இடமாற்றம் செய்வேன் என தொலைபேசி ஊடாக மிரட்டியுள்ளார்.

தனக்கு பொலிஸ் உயர் அதிகாரிகள் மத்தியில் செல்வாக்கு காணப்படுவதாகவும், அத்துடன் அரசியல் பலம் இருப்பதால் தன்னால் உடனடியாக இடமாற்றம் வழங்க முடியும் என மிரட்டியமையால், தனது கடமைக்கு இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளதுடன் , இதனால் மிகுந்த மனவுளைச்சலுக்கும் ஆளாகியுள்ளேன் என பாதிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர் பொலிஸ்நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

முறைப்பாட்டை அடுத்து உரிய நபரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க பொலிஸார் மத்தியில் தயக்கம் காணப்படுவதா வும் , அதனால் உயர் அதிகாரிகளின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் நிலைய தகவல்கள் மூலம் அறிய முடிகிறது.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# புதிய தொழில்நுட்பங்களையும் பயங்கரவாதிகள் பயன்படுத்தும் ஆபத்து என இந்தியா எச்சரிக்கை




இந்தியாவில் நடைபெற்ற பயங்கரவாத எதிர்ப்புக் கூட்டத்தின் முக்கிய கவனம் புதிய மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை பயங்கரவாத குழுக்கள் தவறாகப் பயன்படுத்துவது மற்றும் துஷ்பிரயோகம் செய்வது குறித்து விவாதிப்பதாகும் என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான இந்திய அரசின் நிரந்தரப் பிரதிநிதியும், பயங்கரவாத எதிர்ப்புக் குழுத் தலைவருமான ருசிரா கம்போஜ், சனிக்கிழமையன்று தெரிவித்தார்.

தீவிரவாதத்திற்கு எதிரான சிறப்புக் கூட்டம் தொடர்பில் ஏ.என்.ஐ. உடனான உரையாடலில் காம்போஜ் இவ்வாறு கூறினார்.

இந்த சந்திப்பின் முக்கிய கவனம் பயங்கரவாதிகள் புதிய மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களைத் தவறாகப் பயன்படுத்தி அல்லது துஷ்பிரயோகம் செய்து, தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பங்கள், பயங்கரவாதத்துக்கு நிதியுதவி அளித்தல் மற்றும் ட்ரோன்கள் உட்பட ஆளில்லா வான்வழி அமைப்புகளைப பயன்படுத்துதல் ஆகியவற்றின் மீதாக அமைந்தது.

மேலும், பயங்கரவாதத்தை சமாளிக்க உறுப்பு நாடுகளால் டெல்லி பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்படும் என்று அவர் ஏ.என்.ஐ. இடம் கூறினார்.

பயங்கரவாதத்தின் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கு உறுப்பு நாடுகளை இணைந்து மற்றும் கூட்டமைப்பாகச் செயல்பட ஊக்குவிக்கும் வகையில் டெல்லி அறிவிப்பு இருக்கும் என்று அவர் ஏ.என்.ஐ. இடம் மேலும் கூறினார்.

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சிலின் இரண்டு நாள் பயங்கரவாத எதிர்ப்புக் கூட்டத்தை இந்தியா நடத்தியது, அது இப்போது முடிவடைந்துள்ளது. பயங்கரவாத எதிர்ப்புக் குழுவின் (சிடிசி) புதுடில்லியின் தலைவரான இந்த மாநாடு முறையே ஒக்டோபர் 28 மற்றும் ஒக்டோபர் 29 ஆகிய திகதிகளில் மும்பை மற்றும் புதுதில்லியில் நடைபெற்றது.




இன்று முன்னதாக, ருசிரா காம் போஜ், உறுப்பு நாடுகளுக்கு தனது தொடக்கக் கருத்துகளின் ஒரு பகுதியாக, பயங்கரவாதிகளால் பயன்படுத்தப்படும் புதிய தொழில்நுட்பத்தின் ஆபத்துகளையும் அச்சுறுத்தலையும் எடுத்துரைத்தார்.






சமீப ஆண்டுகளில் தொழில்நுட்பத்தின் வரம்பற்ற ஆற்றலைக் கண்டோம். இந்த கண்டுபிடிப்புகள் அடிப்படையில் நமது சமூகத்தை மாற்றியமைத்துள்ளன. சவால்கள் பல உள்ளன. பயங்கரவாதத்திற்கான புதிய தொழில்நுட்பத்தின் பயன்பாடு அதிகரித்து வருகிறது, என்று கம்போஜ் கூறினார்.

இது இளைஞர்கள் மற்றும் குழந்தைகளை குறிவைத்து பிரச்சாரத்தை உருவாக்குவதற்கு பயங்கரவாதிகளுக்கு வாய்ப்பளித்துள்ளது. தவறான தகவல்களும் பிழையான தகவல்களும் அவர்களால் பயன்படுத்தப்படுகின்றன. அரசியல் அமைதியின்மை மற்றும் சமூக எழுச்சிகள் உருவாக்கப்படுகின்றன. - என்றார் அவர்.

சிறப்புக் கூட்டம் குறித்து பேசிய காம்போஜ், தீவிரவாதத்தை கையாள்வதில் நாடுகளிடையே உள்ள அவசரத்தை இது பிரதிபலிக்கிறது என்றார்.

(மூலம்:ஏ.என்.ஐ.)

# இந்தியாவுடன் தடையற்ற வர்த்தக உடன்படிக்கை எப்போதும் பிரிட்டன் முன்னுரிமை அளிக்கின்றதாம்

பிரிட்டன் இந்தியாவுடன் தடையற்ற வர்த்தக உடன்படிக்கையை எட்டுவதற்கு முன்னுரிமை அளிக்கிறது என அதன் புதிய வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் கிளெவர்லி, தனது முதல் இந்தியப் பயணத்தின் போது கடந்த சனிக்கிழமை ரோய்ட்டர்ஸிடம் தெரிவித்தார். ஆனால் இந்த மாதம் இதற்கான காலக்கெடுவைத் தவறவிட்ட நிலையில் ஒரு புதிய காலக்கெடுவைக் குறிப்பிட அவர் மறுத்துவிட்டார்.

ஜேம்ஸ் கிளெவர்லி புதுடில்லியில் தனது இந்திய சகா எஸ். ஜெய்சங்கருடன் நடந்த சந்திப்பிற்குப் பிறகு, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் இந்திய வம்சாவளியினரான ரிஷி சுனக் புதிய பிரிட்டிஷ் பிரதமராகக் கடந்த வாரம் பதவியேற்ற பின்னர் அவரின் கீழ் மேலும் மேம்படும் என்று கூறினார்.

சில நம்பமுடியாத முக்கியமான உலகளாவிய பிரச்சினைகளைப் பற்றி பேச எனக்கு ஒரு அருமையான வாய்ப்பு கிடைத்தத. அத்தோடு இருதரப்புக் கூட்டாண்மையின் வலிமை மற்றும் இந்தியாவுடன் மிகவும் நெருக்கமாக பணியாற்றுவதற்கான எங்கள் திட்டங்களைப் பற்றியும் பேசுவதற்கு எனக்கு ஓர் அருமையான சந்தர்ப்பம் கிட்டியது என்று பிரிட்டிஷ் தூதுவரின் இல்லத்தில் ஒரு நேர்காணலில் ஜேம்ஸ் கிளெவர்லி கூறினார்.

பிரிட்டிஷ் அரசியலில் கொந்தளிப்பான சில மாதங்களில் சுனக்கின் முன்னோடிகளான போரிஸ் ஜான்சன் மற்றும் லிஸ் ட்ரஸ் ஆகிய இருவருமே கடந்த திங்கட்கிழமை தீபாவளி பண்டிகைக்குள் கையெழுத்திடுவார்கள் என்று நம்பியிருந்த வர்த்தக ஒப்பந்தம் இப்போது என்ன நிலையில் இருக்கிறது என்பதை அவர் கூற மறுத்துவிட்டார்.

இந்த ஆண்டு அதை முடிக்க முடியுமா என்பதைச் கூற ஜேம்ஸ் கிளெவர்லி மறுத்துவிட்டார்.

ஆனால் இது எங்களுக்கு ஒரு முக்கியமான ஒப்பந்தமாகும். நாங்கள் உண்மையில் இதற்கு முன்னுரிமை அளிக்கிறோம். எங்கள் அதிகாரிகள் மற்றும் எங்கள்



அமைச்சர்கள் தொடர்ந்து பேசுவதையும், இதற்காகக் கடினமாக உழைப்பதையும் நாங்கள் தொடர்ந்து உறுதி செய்வோம் என்று அவர் கூறினார்.

நாங்கள் நிறைய வேலைகளைச் செய்துள்ளோம். மேலும் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்துவது போன்ற ஒரு விரிவான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், அது ஒரு போதும் எளிமையாக இருக்காது. அதை நினைவில் கொள்வது முக்கியமானது. வலுவான உறவு மற்றும் அது உண்மையில் எதிர்காலத்தை மையமாகவும் கொண்டது.

"இந்தியாவில் விற்பனை செய்யப்படும் பிரிட்டிஷ் விஸ்கியின் மீது செங்குத்தான இறக்குமதி வரி விதிக்கப்பட்டது. இந்தியர்களுக்கு எளிதாக பிரிட்டிஷ் விசா வழங்குவதில் புதுடில்லி ஆர்வமாக உள்ளது.

எங்கள் விசா ஏற்பாடுகள் விரைவாகவும் எளிதாகவும் வசதியாகவும் இருப்பதை நாங்கள் உறுதிப்படுத்த விரும்புகிறோம் என்றார் ஜேம்ஸ் கிளெவர்லி.

2030க்குள் இருதரப்பு வர்த்தகத்தை இருமடங்காக்க இரு நாடுகளும் விரும்புகின்றன. இப்போது அது 31 பில்லியன் டொலருக்கும் அதிகமாக உள்ளது.

ரஷ்யாவின் எண்ணெய் விலையை கட்டுப்படுத்தும் G7 திட்டம் மற்றும் இந்தியா போன்ற நாடுகளை அதற்கு ஒப்புக்கொள்ளும் முயற்சி குறித்து கேட்டதற்கு, புதுடில்லியின் வெளியுறவுக் கொள்கையை பிரிட்டன் வழிப்படுத்தாது என்று ஜேம்ஸ் கிளெவர்லி கூறினார்.

இந்தியாவிற்கும் ரஷ்யாவிற்கும் நெருக்கமான பாதுகாப்பு உறவுகள் உள்ளன உக்ரைன் போர் தொடங்கியதில் இருந்து இந்தியா ரஷ்யாவின் எண்ணெயை பெரியளவில் வாங்குபவராக மாறியுள்ளது.

ஒரு பிரித்தானிய அரசியல்வாதியான நான் வேறொரு நாட்டிற்கு கொள்கையை ஆணையிடுவது சரியாக இருக்காது என்று நான் நினைக்கிறேன் என்று அவர் கூறினார்.

(மூலம்: 'த எக்கனமிக் ரைம்ஸ்')

காலைக்கதிர் Kalaikkathir

# கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!

## பொ. ஐங்கரநேசன் தெரிவிப்பு

வருடத்தில் எத்தனையோ நாள்களில் நாம் பொங்கி அமுதுண்டாலும் இயற்கையைப் போற்றி வழிபடுகின்ற தைப் பொங்கலே தமிழர்களின் தேசியப்பொங்கல் திருநாளாகக் கொண்டாடப்படுகின்றது. அதேபோன்று, வருடத்தில் எல்லா நாள்களிலும் மரங்களை நடுகைசெய்ய இயலுமெனினும் கார்த்திகைமாத மரநடுகையே தமிழர்களின் தேசிய அடையாளத்துடன் கூடியதாகும். கார்த்திகையில் மரங்களை நடுகைசெய்தல் தேசத்தைக் குளிரச்செய்யும் சூழலியற்செயல் மாத்திரமல்ல் அது தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும் ஒரு தேசியச்செயற்பாடும் ஆகும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபையின் தீர்மானத்துக்கு அமைவாக 2014 ஆம் ஆண்டு முதல் கார்த்திகை மாதம் வடமாகாண மரநடுகை மாதமாக கடைப்பிடிக்கப்படுகிறது. இதனை முன்னிட்டு பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடகஅறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையின் முழுவிவரம் வருமாறு –

பூமி சூடேறி வருவதால் காலநிலையில் படுபாதகமான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன. கடும் வறட்சி, காலம் தப்பிய பெருமழை, வேகமெடுக்கும் சூறாவளிகள், கடல்மட்ட உயர்வு, உயிரினங்களின் அழிவு என்று காலநிலை மாற்றத்தின் விளைவுகளை நாம் தற்போது அனுபவிக்கத் தொடங்கியுள்ளோம். இதனால், வெப்பநிலை அதிகரிப்புக்குக் காரணமான கரியமிலவாயுவை உறிஞ்சி அகற்றுவதற்கு மரங்களின் நடுகையை ஒரு பேரியக்கமாக முன்னெடுக்கவேண்டிய கட்டாயநிலைக்கு நாம் தள்ளப் பட்டுள்ளோம்.

மரநடுகையைப் பெருமளவில் மேற்கொள்வதற்குக் கூடுதலான மழை வீழ்ச்சியைப் பெறும் கார்த்திகை மிகப் பொருத்தமான மாதமாகும்.

ஈழத் தமிழர்களின் வாழ்வியலிலும் கார்த்திகை மாதம் தனித்துவமான இன்னுமொரு சிறப்பைக் கொண்டுள்ளது. இம்மாதத்திலேயே மண்ணுக்காக மரணித்த மறவர்களைக் கூட்டாக நினைவிற் கொள்ளும் நாள் அடங்குகிறது. மரவழிபாட்டைத் தமது தொல்வழிபாட்டு முறையாகக்கொண்ட தமிழர்கள், இறந்தவர்களின் நினைவாக மரங்களை நடுகை செய்து, அவற்றை உயிருள்ள நினைவுச்சின்னங்களாகப் போற்றிய பண்பாட்டு மரபைக் கொண்டிருக்கின்றனர்.

தேசியம் என்பது வெறுமனே தட்டையான ஓர் அரசியற் சொல்லாடல் அல்ல. இது ஓர் இனத்தின் வாழ்புலம், மொழி, வரலாறு, பண்பாடு, மத நம்பிக்கைகள் ஆகிய கூறுகளின் திரட்சியான ஒரு வாழ்க்கை முறையாகும்.

அந்த வகையில், கார்த்திகைமாத மரநடுகை என்பது தமிழ்த்தேசிய நோக்கிலும் மிகவும் பொருத்தப்பாடான ஒன்றாகும்.

எனவே தமிழ் மக்கள் கார்த்திகை மரநடுகையை ஒரு சூழல்பேண் நடவடிக்கையாக மாத்திரமல்லாது உணர்வெழுச்சியுடன்கூடிய ஒரு தமிழ்த் தேசியச் செயற்பாடாகவும் கொண்டாட வேண்டியது அவசியமாகும்.

வருடத்தில் எத்தனையோ நாள்களில் நாம் பொங்கி அமுதுண்டாலும் இயற்கையைப் போற்றி வழிபடுகின்ற தைப் பொங்கலே தமிழர்களின் தேசியப்பொங்கல் திருநாளாகக் கொண்டாடப்படுகின்றது. அதேபோன்று, வருடத்தில் எல்லா நாள்களிலும் மரங்களை நடுகைசெய்ய இயலுமெனினும் கார்த்திகைமாத மரநடுகையே தமிழர்களின் தேசிய அடையாளத்துடன் கூடியதாகும்.



கார்த்திகையில் மரங்களை நடுகை செய்தல் தேசத்தைக் குளிரச்செய்யும் சூழலியற்செயல் மாத்திரமல்ல் அது தமிழ்த்தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும் ஒரு தேசியச்செயற்பாடும் ஆகும்.

– இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மருத்துவ உபகரணங்களுக்கு நாட்டில் கடும் தட்டுப்பாடாம்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் விசனம்

மருந்து தட்டுப்பாட்டுக்கு மேலதிகமாக தற்போது சுகாதார துறையில் அத்தியாவசிய மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு மருந்துப் பொருள்களுக்குக் கடுமையான தட்டுப்பாடு நிலவுவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் இயக்குநர் டாக்டர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனை அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

இதுவரை காலமும் எமக்கு சிகிச்சை பிரிவுகளில் மருந்து தட்டுப்பாடுகள் மாத்திரமே காணப்பட்டன. ஆனால் தற்போது அதற்கு மேலதிகமாக மருத்துவ உபகரணங்களுக்குக் கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது. மேலும் வெளிநோயாளர் பிரிவுகளுக்குத் தேவையான அடிப்படை சிகிச்சைகளையேனும் மேற்கொள்ள முடியாமல் வைத்தியசாலைகள் பாரிய நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளன.

மேலும் முக்கியமான வைத்தியசாலைகளிலும் அதுவும் கொழும்பை அண்மித்த வைத்தியசாலைகளில் செலைன் பெறுவதற்கு கூட முடியாத தொரு மோசமான நிலை காணப்படுகிறது. இரத்த மாதிரி பரிசோதனைகளுக்குத் தேவையான சில உபகரணங்களுக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது.

அநுராதபுரம் வைத்தியசாலைகளில் எக்ஸ்ரே பரிசோதனைகள் மேற்கொள் வதிலும் பாரிய சிக்கல்கள் தோன்றியுள்ளன. அதன் மூலம் நோயாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். மேலும் ஈ.சி.ஜி பரிசோதனைகளை மேற்கொள்வதிலும் சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

அன்று நாம் மருந்து தட்டுப்பாடு தொடர்பில் உரையாடினோம். உண்மையில் மருந்து தட்டுப்பாடு மேலதிகமாகத் தற்போது மருத்துவ உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருள்களுக்கும் வைத்தியசாலைகளில் தட்டுப்பாடு நிலவுகிறது. எனவே இது தொடர்பில் உரிய தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு சுகா தார அமைச்சர் சிறப்பாக செயல்படுகிறார் என்று எமக்கு தெரியவில்லை. – என்றார்.

# ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறியவர்கள் மீண்டும் வரலாம்!

## தயாசிறி பகிரங்க அழைப்பு



அமைச்சுப் பதவிகளைக் கைவிட்டு மீண்டும் வந்தால் அவர்களை ஏற்றுக் கொள்ளத் தயார் என சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியில் இருந்து விலகியவர்கள் மீண்டும் கட்சியில் இணைத்துக் கொள்வார்களா என வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவ்வாறு அவர்கள் வருவர்களாயின் தங்களின் பதவிகளைக் கூட வழங்கத் தயாராக இருப்பதாகவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

# அரசின் அறிவுறுத்தல்களை பொருட்படுத்தாமல் செயற்படுகின்றன நாட்டின் மாகாண சபைகள்!

## கணக்காய்வு திணைக்களம் சுட்டிக்காட்டு

அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை பொருட்படுத்தாது பல மாகாண சபைகள் தமது விருப்பத்துக் கேற்ப அதிகாரிகளை பணியமர்த்தியுள்ளன எனக் கணக்காய்வு திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

சில ஆளுநர்களின் தயவால் இவ்வாறு ஓய்வுபெற்ற அதிகாரிகள் பணியமர்த்தப்பட்டுள்ளனர் என்பதுடன் அவர்களது ஓய்வூதியம் தவிர மற்றுமொரு உதவித்தொகையை இந்தப் பதவிகளில் பெறுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உதாரணமாக மேல் மாகாணத்தில் மாநகர ஆணையாளர்களாக ஓய்வுபெற்ற பத்து அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் வகையில், ஓய்வூதியங்களை சிக்கனமாகப் பயன்படுத்த உத்தர விடப்பட்டது.

அவ்வாறு வெளியேறிய அதிகாரிகளுக்கு வேறு சம்பளம் வழங்கி பணியமர்த்தப்பட்டுள்ளமை தொடர்பாக நிதியமைச்சு கவனம் செலுத்த வேண்டுமென கணக்காய்வு திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

# கொழும்பு பள்ளிவாசல்கள் சம்மேளன தலைவராக சட்டத்தரணி சிராஸ் தெரிவு



சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன், கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். தெஹிவளை ஜும் ஆ பள்ளிவாசலில், அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா சபையின் கொழும்பு நகரக் கிளையின் நேரடி மேற்பார்வையில் நடந்த நிர்வாக தெரிவின் போது இவ்வாறு அவர் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி சிராஸ் நூர்தீன், 2014 இல் கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மே ளனத்தை ஆரம்பிக்கும் போது அதன் ஸ்தாபக உறுப்பினராகவும், செயலாளராகவும் ஏற்கனவே பதவிவகித்துள்ள நிலையிலேயே தற்போது புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம், கொழும்பு நகரை மையப் படுத்தி அமையப் பெற்றுள்ள 180 பள்ளிவாசல்களை மையப்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது. அந்த சம்மேளனத்தின் கீழ் 12 கிளைகளும் இயங்குகின்றன.

இந் நிலையில் மேற்படி சம்மேளனத்தின் செயலராக புதுக்கடை கிளை சம்மேளனத்தை சேர்ந்த அப்துல் கரீமும், பொருளாலராக கொலன்னாவ கிளையைச் சேர்ந்த பெரோஸ் மொஹம்மட்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தற்காலிகமாகச் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டவர்களுக்கு நிரந்தர பத்திரம்!

தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டவர்களுக்கு எதிர்வரும் 15 நாள்களுக்குள் நிரந்தர சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரம் தயாரிப்பதற்கான அட்டை தட்டுப்பாடு காரணமாக சுமார் 6 லட்சம் சாரதி அனுமதிப்பத்திரங்கள் தற்காலிகமாக வழங்கப்பட்டுள்ளன என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், அதற்கான அட்டைகளை ஆஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்ய தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## மதியுரைஞரின் அபிப்பிராயம்



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 168

‘போரும் சமாதானமும்’ என்ற தனது நூலில் மதியுரைஞர் பாலசிங்கம் 16 செப்டம்பர் 2002 பேச்சுவார்த்தைகள் தாய்லாந்தில் ஒரு பிரம்மாண்டமான தொடக்க விழாவாக, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக வளரப்போகும் முயற்சிக்கு முத்தாய்ப்பு வைப்பது போல இருந்தது எனவும், சமாதானத்துக்கான எதிர்பார்ப்பு, சர்வதேசத்தின் நல் விருப்பங்கள், போரில் இருந்த இரு பகுதியினரதும் நல்லுறவுகள், இவற்றை உறுதிப்படுத்துவதாக இருந்தது எனவும் குறிப்பிடுகிறார்.

இரு பகுதியினரும் தங்களது பகைமைகளை மறந்து, திறந்த மனதுடன், உண்மையான சமாதான விரும்பிகளாகப் பேச்சுக்களில் ஈடுபட உத்தேசம்



சொல்ஹெய்ம்

கொண்டுள்ளார்களா? அன்றில் தங்களது தொடக்க உரைகளில் தாங்கள் இதுவரை கொண்டிருந்த தங்களது வேரூன்றிய விரோத போக்குகளையே திரும்பவும் கூறப் போகின்றார்களா என்பவற்றை அறிந்து கொள்ள சர்வதேச ஊடகவியலாளர்கள் முண்டியடித்துக் கொண்டிருந்தார்கள்.

விடுதலைப் புலிகள் முன்னர் இந்தியாவுடனும், பின் ஸ்ரீலங்கா அரசுடனும் வெவ்வேறு பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டிருந்தாலும், இப்போது ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சு வார்த்தைகளுக்காக தாய்லாந்தில் சந்திப்பது கடுமையான உறுத்தல்கள் தரக்கூடிய கடப்பாடுகளையும் கூடவே கொண்டுள்ளது. ஏனெனில் பிராந்திய பின்னணிகளில் இருந்து சர்வதேச மேடைகளுக்கு நாம் பயணிக்கிறோம். இந்தப் பயணத்தை மேற்கொள்வதற்கு எரிக் சொல்ஹெய்மும் அவரது நோர்வீஜிய வெளியுறவுத் தரப்புகளும் மாதக்கணக்கில் எத்தனையோ சந்திப்புகளை விடுதலைப் புலிகளுடன் நடத்தி, இணக்கங்களை ஏற்படுத்தி, இந்த மேடைக்கு – பேச்சு வார்த்தைகளின் தொடக்க தினத்துக்கு – யாவரையும் கொண்டு வந்ததில் அவர் (எரிக் சொல்ஹெய்ம்) கொண்டிருந்த அங்கலாய்ப்புகளில் இருந்து நிம்மதியான மூச்சு விட்டார்.

சமாதானத்திற்கான அனுசரணையாளர்கள் அவர்களது பேச்சு வார்த்தைகளின் பாதைகளை சாதுரியமாக இரு பகுதினரையும் தங்களது பிரச்சினைகளையோ, சிக்கலாக இருப்பவற்றையோ அடையாளம் கண்டு, அவை பற்றி வெளிப்படையாக, கசப்புணர்வுகளை தவிர்த்து செயற்பட்டு, நம்பிக்கைகள் வளரும் விதத்தில் நடந்தனர் என நான் கூறுவேன். மிகவும் முக்கியமாக அனுசரணையாளர்கள் இரு பகுதியினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சம நிலைகளை உணர்வுபூர்வமாக மனதில் கொண்டு அதனைப் பாதுகாத்துக் கொள்வதில் கவனம் எடுத்துக் கொண்டார்கள். ஆனால் சில சர்வதேச நாடுகள், தங்கள் நலன்களுக்காக சமாதான பேச்சுகளில் நிதி உதவிகள் மூலமாக கட்டுப்பாடுகள் விதித்தமை, இரு தரப்பினரும் தாம் பயணித்த தம் வழிகளில் தீர்மானம் எடுத்துக் கொள்ளக்கூடிய தகமைகளைப் பாதித்தது.

மதியுரைஞர் குறித்தபடி பேச்சு வார்த்தைகள் பிராந்திய மேடைகளில் இருந்து சர்வதேச கடலில் ஓடிய போது, வரக்கூடிய எதிர்பாராத புயல்களையும் சமாளித்து பயணித்திருக்க வேண்டும். அப்படியான எதிர்பார்த்து இருக்கக் கூடிய புயல்கள் எப்படி சமாளிக்கப்பட்டன என்பதில்தான் திசைகள் திரும்பின.

காலவரையறையில் சமாதானப் பேச்சு வார்த்தையைத் திரும்பிப் பார்த்தால் –

1. மே 1999 – ஜனாதிபதி சந்திரிகா நோர்வேக்கு சமாதான பேச்சுகளுக்கு அழைப்புத் தருகிறார்.

2. டிசம்பர் 2001 – ரணிலின் ஐக்கிய தேசியக் கட்சி தேர்தலில் வெற்றியீட்டி அவர் பிரதமராகிறார்.

3. ஏப்ரல் 2003 – விடுதலைப் புலிகள் தங்களை அமெரிக்கா வொஷிங்டனில் நடைபெற்ற நிதி உதவி தர விரும்பிய நாடுகளின் சம்மேளனத்திற்கு அழைப்பு தரவில்லை எனக் காரணம் காட்டி சமாதான பேச்சுக்களை புறக்கணிக்கிறார்கள். ஜப்பானில் நடக்கவிருந்த தொடர்ந்த பேச்சுக்களின் விடுதலைப் புலிகளை பங்குபற்ற வைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிகின்றன.

4. 04 நவம்பர் 2003 – ஜனாதிபதி சந்திரிகா தனது நிறைவேற்று அதிகாரங்களைப் பாவித்து ரணிலின் அரசைக் குழுப்பி, பின் நாடாளுமன்றத்தையும் கலைக்கிறார்.

5. 26 மார்ச் 2004 – விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண தளபதி கருணா புலிகளிடம் இருந்து பிரிகிறார்.

6. 26 டிசம்பர் 2004 – சுனாமி பேரலையின் தாக்குதல்.

7. நவம்பர் 2005 – மஹிந்த ஜனாதிபதி பதவி ஏற்கிறார்.

8. ஜூலை 2006 – மாவிளாற்றின் மதகுகள் விடுதலைப் புலிகளால் அடைக்கப்பட்டு திரும்பவும் போர் மூழுகிறது. தளபதி கருணா அரசாங்கத்தின் படைகளோடு இணைந்து போராடுகிறார்.

9. 08 ஜனவரி 2009 – ஸ்ரீலங்கா படைகள் கிளிநொச்சியைக் கைப்பற்றுகின்றன.



பிரபாகரன்

10. 18 மே 2009 – விடுதலைப் புலிகள் களத்தில் வெற்றி கொள்ளப்படுகிறார்கள்.

ஏற்றுக்கொண்ட பரிமாணங்களிலும், அதற்கான பேச்சுவார்த்தைகளிலும் இருந்து வெளியேறி, தாங்கள் கொண்டிருந்த – வேரூன்றிய – தனிநாட்டுக் கோரிக்கைகளுக்காக யதார்த்தங்களையும் நிதர்சனங்களையும் மீறி, தங்களது திராணிகளில் செயல்படுத்த முனைந்ததின் விளைவுகள் இந்த நிலைகளை ஏற்படுத்துவதில் பங்கு வகித்தன என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கேள்வி: விடுதலைப் புலிகள் இப்படியான பேச்சு வார்த்தைகளால் தீர்வு



பாலசிங்கம்

வரும் என நம்பி ஈடுபட்டார்களா? அன்றில் ஈடுபட்டிருக்க வேண்டுமா?

விடுதலைப் புலிகள் தங்களது ஆயுதப் போராட்டத்திற்கு சர்வதேச அங்கீகாரம் தேவை என்பதை உணர்ந்து இருந்தார்கள். ஆகவே தங்களது போராட்டத்தை சர்வதேச மயப்படுத்துவதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டனர். எல்லா விடுதலை குழுக்களும் திம்பு மாநாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட, விடுதலை குழுக்கள் இந்தியாவிடம் தாங்கள்தான் தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகளானமையால் தமிழர் விடுதலைக் கூட்டணி பேச்சு வார்த்தைகளில் இருந்து நீக்கப்பட்டு, தாங்களே அவற்றை நடத்த வேண்டும் என நிர்ப்பந்தித்தனர். இந்தியா அதை ஏற்கவில்லை. ஆயினும் அதற்கு மேலாக ஜனாதிபதி ஜே.ஆர். தாம் வன்முறை வாதிகளுடனோ, பயங்கரவாதிகளுடனோ, அவர்களுக்கு அங்கீகாரம் தரும் விதத்தில் அவர்களுடன் இருந்து பேச மாட்டேன் என அடம்பிடித்தாலும், இந்தியாவின் நிர்பந்தத்தில் விடுதலை குழுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிரான கடும் போக்கைக் கைவிட்டு, திம்புவில் பேச்சுவார்த்தை மேசைகளில் விடுதலை குழுக்களை அமர வைக்க மதியுரைஞர் தந்த அறிவுரை, அதனால் அவர்களுக்கு சர்வதேசத்தில் ஓர் அங்கீகாரம் கிடைக்கிறது, அந்தச் சந்தர்ப்பத்தைக் கைவிடக்கூடாது என்பதுதான்.



ராஜீவ்

இந்தியா அவர்களுக்கு அங்கீகாரம் கொடுத்து நடத்தியது.

இந்திய ஒப்பந்த காலங்களில் விடுதலை புலிகளின் பிரபாகரனுடனும், மதியுரைஞர் பாலசிங்கத்துடனும் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி பிரத்தியேக பேச்சுக்கள் நடத்தி, உறுதிமொழிகளும் அவரால் தரப்பட்டன.

இந்திய!ஒப்பந்தத்தின் எதிர்ப்பாலும், பின்னர் நடந்த ராஜிவின் கொலையாலும் விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகளாக பார்க்கப்பட்டு, சர்வதேச நாடுகள் மற்றும் நிறுவனங்கள் இடையே இருந்த அங்கீகாரத்தையும் இழந்து, தங்களது புலம்பெயர் அமைப்புகள் மூலம் அவர்கள் வசிக்கும் நாடுகளில் தமிழ் மக்களின் நியாயமான ஆயுதப் போராட்டங்களுக்கு அங்கீகாரங்கள் தேடிக் கொண்டிருந்தனர்.

இடையில் பிரேமதாசா ஜனாதிபதியானதும் நடந்த பேச்சு வார்த்தைகளால் ஸ்ரீலங்கா தந்த அங்கீகாரத்தில் அவர்களது புலம்பெயர் அமைப்புகள் அதனை பிரசாரப்படுத்தினர். அதுவும் ஏதும் பலன் தராததால் சர்வதேச மயப்படுத்த வழிகளை ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஏற்பட்ட சந்தர்ப்பமே இந்த நோர்வே சமாதானப் பேச்சு வார்த்தைகள். அது உருவானதை நாளை பார்க்கலாம்.

(வளரும்...)

## கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு .....



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கார்த்திகை மாதம் நேற்றுஆரம்பித்துள்ள நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் அந்த வீதியைச் சிரமதானம் செய்ய முற்பட்டுள்ளனர்.

இதற்கு இடையூறு ஏற்படுத்திய ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அந்த வீதியை சிரமதானம் செய்து பௌத்த கொடியை நாட்டுவதற்கு முற்பட்டனர்

இதனால் இரு தரப்பினருக்கும் இடையில் குழப்பமான சூழல் ஏற்பட்டதை தொடர்ந்து இராணுவத்தினரால் தமிழ் தேசிய மக்கள் முன்னணின் தலைவர் உள்ளிட்ட பிரதிநிதிகள் படம் எடுக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

எனினும் சில மணி நேரத்தின் பின்னர் இராணுவத்தினர் அங்கிருந்து சென்றுள்ளனர். அதனைத் தொடர்ந்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் சிரமமான பணியை முன்னெடுத்தனர்

அத்துடன் கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி, இராணுவப் பொறுப்பு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டனர்.

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் ............



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுத்தனர்

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், அரசுக்கும் குறிப்பாக காணாமலாக்கப்பட்டோர் பற்றிய அலுவலகத்தின் (ஓ.எம்.பி) செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையிலும் பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காணாமல் போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் (ஓ.எம்.பி) மூலம் கடிதங்கள் கிடைக்கப் பெற்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அந்த அலுவலகத்துக்குப் பதிவுக்குச் சென்றபோது நேற்றைய போராட்டத்தை வழிநடத்துபவர்களால்வர்கள் தடுத்து நிறுத்தப்பட்டமையை அடுத்து பொலிஸாருக்கும் போரட்டக்காரர்களுக்குமிடையில் முறுகல் ஏற்பட்டது. பின்னர் விரும்பிய மக்கள் சென்று பதிவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## குடாநாட்டில் பல ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கின்றது.

கடந்த 72 மணி நேரத்தில் சுமார் 165 மி.மீற்றர் மழைப் பொழிவு ஏற்பட்ட நிலையில் இதுவரை 13 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேர் இடம் பெயர்ந்துள்ளன. பல நூறு குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

இதில் தாழ்வான பிரதேசங்கள் மற்றும் குடிசை வீடுகள், வீட்டுத் திருத்தங்களில் அகப்பட்ட குடும்பங்களே அதிக பாதிப்பினை எதிர்கொண்டுள்ளனர். இடம்பெயர்ந்த 13 குடும்பங்களில் ஒரு தரப்பின் வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

மழை வீழ்ச்சி தொடரும் நிலையில் குளிருடன்கூடிய காலநிலையும்காணப்படுவதனால் சிறியவர்கள் மற்றும் முதியவர்கள்அதிகபாதிப்பினைஎதிர்கொள்கின்றனர்.

## கோட்டாவின் தோல்விக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர்சன்னஜயசுமணதெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆலோசனைக்கு செவிசாய்த்து அதன்படி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செயற்படுவார் எனக் கட்சி எதிர்பார்த்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதல் சில மாதங்கள் கோட்டாபய ராஜபக்ஷ அவ்வாறு செயற்பட்ட போதிலும் அதன்பின்னர் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட கட்சி உறுப்பினர்களின் ஆலோசனைகளை அவர் புறக்கணித்தார் எனவும் அவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் சில குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனைகளை மாத்திரமே கோட்டாபய ராஜபக்ஷ செவிமடுத்தார் எனவும் அதனால்தான் அவர் ஜனாதிபதியாக தோல்வியடைந்தார் எனவும் பேராசிரியர் சன்ன ஜயசுமன மேலும் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆலோசனைக்கு செவிசாய்த்திருந்தால் கோட்டாபய ராஜபக்ஷ தோல்வியடைந்திருக்க மாட்டார் என்றும் அவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது செயற்பாடுகளுக்காக கட்சி உறுப்பினர்கள் மீது பழியை சுமத்த முற்பட்டுள்ளார் எனவும் பேராசிரியர் சன்ன ஜயசுமண கடுமையாக சாடியுள்ளார்.






காலைக்கதிர் Kalaikkathir

# பிரதேசசபை உறுப்பினராகக் கூட பதவி வகிக்காத கோட்டாவை ஜனாதிபதியாக்கியதால் மஹிந்தவின் அரசியல் புகழ் பாதிப்புற்றது!

## குமார வெல்கம சுட்டிக்காட்டு



பிரதேச சபை உறுப்பினர் பதவி கூட வகிக்காத கோட்டாபயராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கியதால் மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் புகழுக்கு தற்போது பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் தேர்தல்களில் ராஜபக்ஷர்கள் படுதோல்வியடைவார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

களுத்துறை பகுதியில் இடம்பெற்ற புதிய லங்கா சுதந்திர கட்சியின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குடும்ப ஆலோசனைக்கு முன்னுரிமை வழங்கி அரசியல் ரீதியில் எடுத்த தீர்மானம் இன்று முழு நாட்டுக்கும் பாரியதொரு வினையாக மாறியுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போது தனது சகோதரரான கோட்டபய ராஜபக்ஷவை வேட்பாளராகக் களமிறக்குவதாக அறிவித்ததற்கு நான் கடுமையாக எதிர்ப்பை வெளிப்படுத்தினேன்.

பிரதேச சபை உறுப்பினர் பதவி கூட வகிக்காத ஒருவர் எமது நாட்டின் அரசியல் நிர்வாகக் கட்டமைப்பின் பிரகாரம் அரச தலைவராக செயற்பட முடியாது,

ஆகவே, கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்குமாறு நான் மஹிந்த ராஜபக்ஷவிடம் எடுத்துரைத்தேன். குடும்ப ஆலோசனைக்கு அமைய எடுக்கப்பட்ட தீர்மானத்தை அவர் மாற்றிக் கொள்ளவில்லை.

நான் குறிப்பிட்டவை இரண்டரை வருட காலத்துக்குள் உண்மையானது. கோட்டாபய ராஜபக்ஷ பலவீனமான அரச தலைவராகவே பதவி விலகினார்.

அவர் எடுத்த தவறான அரசியல் தீர்மானங்கள் இன்று முழு நாட்டுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. நாட்டுமக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் அவர் எவ்வித குறையுமின்றி அரச வரபிரசாதங்களுடன் சுகபோகமாக வாழ்கிறார்.

கோட்டாபய ராஜபக்ஷவால் மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் புகழுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் இடம்பெறும் தேர்தல்களில் ராஜபக்ஷர்கள் படுதோல்வியடைவார்கள் என்பதை உறுதியாகக் குறிப்பிட வேண்டும்.

எதிர்வரும் மார்ச் மாதம் நாடாளுமன்றத்தை கலைத்து பொதுத்தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தற்போதைய நிலைமை கவலைக்குரியது. கட்சி தலைவரின் கருத்துக்கு கட்சி உறுப்பினர்கள் மதிப்பளிப்பதில்லை.

சுதந்திரக் கட்சியின் அடிமட்ட உறுப்பினர்கள் புதிய லங்கா சுதந்திர கட்சியுடன் ஒன்றிணைவார்கள். எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் தேர்தல்களில் ஒன்றிணைந்து போட்டியிடுவோம். – என்றார்.

# நாட்டு மக்கள் விரும்பிய ஆட்சியை அமைக்க வாய்ப்பளிக்கப்படவில்லை

## ரில்வின் சில்வா சுட்டிக்காட்டு



அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு போராடிய மக்களுக்கு தமக்கு விருப்பமானதொரு ஆட்சியை அமைப்பதற்கு வாய்ப்பளிக்கப்படவில்லை.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட புதிய அரசாங்கம் உருவாக்கப்பட வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

பண்டாரகமவில் இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் கட்சி கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனை அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

தற்போது ஆட்சியில் உள்ள ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு மக்களின் ஆதரவு இல்லை. பொருளாதார நெருக்கடிகளைத் தீர்பதற்கு புதிய அரசாங்கமொன்றை உருவாக்க வேண்டும். அந்த அரசாங்கம் மக்களுடைய ஆதரவைப் பெற்றுக்கொண்ட அரசாங்கமாக அமைய வேண்டும். இருப்பினும் நாட்டு மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களில் ஈடுப்பட்டும் தமக்கு விருப்பமான ஆட்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கு இறுதி யில் முடியாமல் போனது. அதற்கான வாய்ப்புகளும் மக்களுக்கு வழங்கப்படவில்லை. எதிர்காலத்தில் தேர்தல் தொடர்பில் புதிய திருத்தங்களை முன்வைக்க உள்ளதாகக் கூறுகிறார்கள். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் இளைஞர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதற்கும், அரசியலில் பெண்களின் இருப்பைப் பாதுகாத்துக் கொள்ளவும் மேலும் 8 ஆயிரம் எண்ணிக்கையாக உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கும் தேர்தல் சட்டமூலம் ஒன்றைக் கொண்டு வரப்போகிறார்களாம். அதனை நிறைவேற்றும் போது காலம் கடந்து விடும்.

தேர்தல் தொடர்பில் சட்டமூலம் தயாரிக்கும் வரை தேர்தல் இல்லை என்று கூறுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. – என்றார்.

# அரச வைத்தியசாலைகளில் கட்டணம் செலுத்தி சிகிச்சை: சுகாதாரசேவையை தனியார் மயமாக்குவதற்கான திட்டமா?

## அகில இலங்கை தாதிமார் சங்கம் காட்டம்

இலவச சுகாதாரசேவையைத் தனியார் மயப்படுத்துவதற்கு அரசாங்கம் முயல்கின்றது என அகில இலங்கை தாதிமார் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கு எதிராக பாரிய போராட்டத்தில் ஈடுபடுடவுள்ளதாகவும் அகில இலங்கை தாதிமார் சங்கம் தெரிவித்துள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட சில வைத்தியசாலைகளில் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் முறையை அறிமுகப்படுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சர் தெரி வித்துள்ளார் இதனைச் செவிமடுக்கும் போது அரசாங்கம் இலவச சுகாதார சேவையை தனியார் மயப்படுத்த முயல்கின்றது என நாங்கள் கருதுகின்றோம் என அகில இலங்கை தாதிமார் சங்கத்தின் தலைவர் எஸ்.பி.மெடிவத்தை தெரிவித் துள்ளார்.

இந்தத் திட்டத்தின் ஊடாக தனியார் மயப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கின்றது. மக்களின் நலன்களுக்காக இதனை முன்னெடுக்கவில்லை என்பது தெளிவான விடயம் எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனத் தெரிவித்துள்ள அவர், தனியார் வைத்தியசாலைகளிற்கு சென்றவர்களால் தற்போது தனியார் வைத்தியசாலை களுக்கான கட்டணங்களை செலுத்த முடியாத நிலை காணப்படுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறும் முறையை அறிமுகப்படுத்துவதற்கு பதில் இலவச சுகாதார முறையை அரசாங்கம் விஸ்தரிக்கவேண்டும் எனவும் என அகில இலங்கை தாதிமார் சங்கத்தின் தலைவர் எஸ்.பி.மெடிவத்தை தெரிவித்துள்ளார். கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறக் கூடியவர்கள் செல்வதற்கான தனியார் வைத்தியசாலைகள் நாட்டின் பல பகுதிகளில் உள்ளன. இது தொடர்பாக எங்களுக்கு ஆட்சேபம் இல்லை, மக்கள் கட்டணம் செலுத்தி சிகிச்சை பெறக்கூடிய சில அரசாங்க வைத்தியசாலைகள் உள்ளன. இது தொடர்பில் எங்களுக்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் ஏனைய அரசாங்க வைத்தியசாலைகளை மெல்ல மெல்ல தனியார் மயப்படுத்தும் முயற்சிகளை அனுமதிக்கமாட்டோம் ஏனைய தொழிற் சங்கங்களுடன் இணைந்து இதற்கு எதிராகப் பாரிய ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# டயானா கமகே வெளிநாட்டவர்!

## உதய கம்மன்பில போட்டுத் தாக்கு



சுற்றுலா இராஜாங்க அமைச்சர் டயானா கமகே இரட்டைக் குடியுரிமை பெற்றவர் அல்லர் என்றும் வெளிநாட்டவர் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இரட்டைக் குடியுரிமை பெற்றிருப்பதை விட வெளிநாட்டவர் நாடாளுமன்றத்தில் இருப்பது மிகவும் ஆபத்தானது என அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் இரட்டைக் குடியுரிமை தொடர்பான விசாரணைகளை குடிவரவு குடியகல்வு திணைக்களம் மேற்கொண்டு இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் எவரும் நாடாளுமன்றத்தில் இல்லை என்று அறிவித்தமைக்கே விமல் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டு மக்களில் எத்தனை வீதமானவர்கள் அரசின் நடவடிக்கைகளை ஆதரிக்கின்றனர்

## கருத்துக்கணிப்பு மூலம் புதிய தகவல்கள்



அரசாங்கத்துக்கான மக்கள் ஆதரவு பத்து வீதமாக அதிகரித்துள்ளமை வெரிட்டே ரிசேர்ச் மேற்கொண்ட கருத்துக்கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

அரசாங்கம் நாடு பொருளாதாரம் தொடர்பாக மக்களின் நம்பிக்கை அங்கீகாரம் போன்றவற்றை அறிந்துகொள்வதற்காக வெரிட்டே ரிசேர்ச் நடத்திய கருத்துக்கணிப்பின் மூலம் இது தெரியவந்துள்ளது.

தற்போதைய அரசாங்கம் செயற்படும் விதத்தை ஏற்றுக்கொள்கின்றீர்களா நிராகரிக் கின்றீர்களா என்ற கேள்விக்கு கருத்துக்கணிப்பில் கலந்து கொண்டவர்களில் பத்து வீதமானவர்கள் மாத்திரம் அங்கீகரிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

இது கடந்த 2022 ஜனவரியில் காணப்பட்ட குறைவான ஆதரவையே வெளிப்படுத்தியுள்ளது எனினும் ஜூன் மாதம் 3 வீதமாக காணப்பட்ட நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது காணப்படும் பொதுவான நிலை தொடர்பாக நீங்கள் திருப்தியடைந்துள்ளீர்களா என்ற கேள்விக்கு கருத்துக்கணிப்பில் கலந்து கொண்டவர்களில் 7 வீதமானவர்கள் திருப்தி எனத் தெரிவித்துள்ளனர்.

ஜனவரியில் இந்த கேள்விக்கு 6 வீதமானவர்கள் திருப்தி எனவும் ஜூனில் இரண்டு வீதமானவர்கள் திருப்தி எனவும் பதிலளித்திருந்தனர்.

பொருளாதார நம்பிக்கை, பொருளாதாரம் செல்லும் திசை தொடர்பாகப் பல கேள்விகளுக்கு கருத்துக்கணிப்பில் கலந்துகொண்டவர்கள் எதிர்மறையாகவே பதிலளித்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.11.2022இல் வெளியிடப்பெற்றது.